# சங்கப் பாடல்களும் மன்யோசு பாடல்களும்: ஓர் ஒப்பீட்டாய்வு

எஸ். குமரன்
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்

தமிழ் மொழியினை ஏனைய பிற மொழிகளுடன் ஒப்பிட்டு ஆய்கின்ற தன்மை பலகாலமாக நடைபெற்று வருகின்ற நடைமுறையாக உள்ளது. முதன் முதலில் கால்டுவெல்லே தமிழ் மொழியின் சிறப்பை உலகறியச் செய்தவராவார். அவர் தனது "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூலில் தமிழ் மொழியின் இலக்கண அமைப்பினை எடுத்து விளக்கி, அது திராவிட மொழிக்குடும்பத்தில் மிகவும் உன்னதமான வளர்ச்சி நிலையை அடைந்த மொழியாய் இருப்பதையும் காட்டியுள்ளார். பழந்தமிழ் இலக்கணங்களோ இலக்கியங்களோ கால்டுவெல் படித்திருக்கவில்லை. அதனால் தமிழ் மெழியின் பழமையான பண்புகளைப்பற்றி அவர் எழுதவில்லை.

பிறமொழிகளோடு தமிழ்மொழியை ஒப்பிட்டு ஆய்வுசெய்த அவர், தமிழ் மொழிக்கும் ஜப்பானிய மொழிக்கும் உள்ள உறவுபற்றிய கருத்தையும் தமது நூலிலே எடுத்துக் காட்டியுள்ளார். கால்டுவெல்லுக்குப் பின்னர் தமிழ் – ஜப்பானிய மொழி உறவு பற்றிய ஆய்வு நீண்ட காலமாக நடைபெறவில்லை. இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ஜப்பானிய அறிஞர்களான சுகுமுஷபா, அகிறபுஜிவற, மினொருகொ ஆகியோர் திராவிட மொழிகளுக்கும் ஜப்பானிய மொழிகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளை ஆராய முற்பட்டனர். இந்நிலையில் தில்லிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜப்பானிய மொழி அறிவு பெற்ற பாலாம்பாள் எழுதிய ஜப்பானிய – தமிழ் மொழிகளின் வேற்றுமையுருபுகள், இடைநிலைகள் ஆகியவற்றிடையே காணப்படும் ஒற்றுமை பற்றிய கட்டுரை ஒன்றைப் படித்த ஜப்பானிய பேராசிரியர் சுசுமு ஒனோ (கக்சுயின் பல்கலைக்கழகம், தோக்யோ) (Susumo Ohno, Gakshuin University, Tokyo) ஜப்பானிய மொழியைத் தமிழ் மொழியுடன் ஒப்பிட்டு நோக்கும் ஆய்விலே ஈடுபடத் தொடங்கினார். அவர் எழுதிய "தமிழ் – ஜப்பானிய மொழிகளிடையே ஒலி வேற்றுமைகள்" (Sound Correspondences Between Tamil and Japanese)[1] குறித்த செய்திகளை ஆய்வுசெய்து 1981– ஆம் ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பித்தார். அதன் பிறகு *"ஜப்பானிய மொழியிலே நிகொன்கொநொ தமிரு கொ"* என்ற நூலையும் வெளியிட்டார்.[2]

பிறமொழி இலக்கியங்கள் பற்றிய செய்திகளைத் தமிழர் அறிய வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். ஜப்பானிய மொழியும் தமிழ் மொழியும் ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்னும் கோபாடு வலும் பெற்று வரும் நிலையிலே, ஜப்பானிய இலக்கியங்கள் பற்றிய அறிமுகமும் இன்றியமையாதது. குறிப்பாக மன்யோசு என்று அழைக்கக்கூடிய பழைய ஜப்பானியக் காதல் பாடல்களும் தமிழ் மொழியிலேயே தோன்றிய – காலத்தால் பழைமை பெற்ற சங்க அகப்பாடல்களம் மிக நெருங்கிய ஒற்றுமைப்பட்ட பண்புகளைக் கொண்டுள்ளன. எனவே, சங்க இலக்கியங்கள் பற்றிப் பார்க்கின்ற வேளையில், ஜப்பானியக் காதல் பாடல்கள் பற்றிய கருத்துகளையும் இணைத்துப் பார்ப்பது பொருத்தமாகும். 3

1985– ஆம் ஆண்டு சுசுமு ஒனோ தம் ஆய்வுப் பரப்பை விசாலித்து *'தமிழர்– ஜப்பானியர், பண்பாட்டு ஒற்றுமை* (Worldview and Rituals among Japanese and Tamils)[4]" பற்றிய நூலொன்றை அருணாசலம் சண்முகதாஸ் மற்றும் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரோடு இணைந்து வெளியிட்டார். தம் ஆய்வுக் கருத்துகளைத் தொடர் கட்டுரைகளாகவும் (Kokku Bankakku Kaishaku to Susumo ohno, Gakshuin University, Tokyo kansho) என்ற தலைப்பில் ஜப்பானிய மொழியிலே எழுதி வெளியிடுகிறார். இதுவரை 53 கட்டுரைகள் வெளிவந்துள்ளன.[5]

ஜப்பானிய மொழியிலே எழுந்த பழைய காதல் படங்கள் இன்று *மன்யோசு* (MAN-YO-SHU) என்னும் தொகுப்பு இலக்கியமாக நூல் வடிவு பெற்றுள்ளன. *மன்யோசு* (MAN-YO-SHU) பாடல்களுக்கு முன்னர், *கொஜிகி, நிகொன்சொகி* போன்ற பழைய செய்திகளின் தொகுப்பு என்ற வகையிலே மன்யோசு பழமையானது எனக் கொள்ளலாம். இத்தொகுப்பில் பல்வேறுபட்ட காலத்தில் பல்வேறு புலர்களாற் பாடப்பட்ட பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கி.பி. 5– ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி.பி. 8– ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை பாடப்பட்டுள்ள பாடல்கள் இத்தொகுப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. *மன்யோசு* என்னும் தொகுப்பு நூலின் பெயரைத் தமிழ்மொழியிலே நேர்மொழிபெயர்ப்புச் செய்யின் 'பத்தாயிரம் இலைத் தொகுப்பு' என அமையும் *மன்யோசு* தொகுப்பில், 450 புலவர்கள் பாடிய 4,516 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. எனவே, பல ஆயிரம் பாடல்களின் தொகுப்பு என்ற கணிப்பிலேயே *மன்யோசு* என்ற பெயர் இத்தொகுப்பிற்கு வழங்கப்பட்டதெனலாம்.

பாடல்கள் யாவுமே வாய்மொழிப் பாடல்களாகப் பேணப்பட்டு வந்து, பின்னர் சீனமொழி வரிவடிவத்திலே எழுத்துப் படியாக்கம் செய்யப்பட்டன. எனினும், சீனமொழி வரி வடிவத்தின் உச்சரிப்பு நிலையை மட்டுமே தம் பாடல்களை எழுத்து படியாக்கம் செய்வதற்கு ஜப்பானியர் பயன்படுத்தினர். பொருள் நிலையில் சீன மொழி வரிவடிவம், பாடல்களின் எழுத்துப் படியாக்கத்தில் பயன்படுத்தப்படவில்லை. பொருள் நிலையில் ஜப்பானிய மொழியின் பொருளமைதியே பேணப்பட்டுள்ளது. எனவே, *மன்யோசு* பாடல்கள் எழுதப்பட்ட சீன மொழி வரிவடிவத்திற்குப் புதிய பெயர் ஒன்றும் வழங்கப்பட்டது, இவ்வரிவடிவத்தை ஜப்பானியர் *மன்யோசு* என அழைத்தனர். இதன் மூலம் மன்யோசு பாடல்களின் வரிவடிவம் தனித்துவமானது என்பதையும் பாடல் படியாக்கம் செய்தவர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர். ஜப்பானிய மொழிக்கெனத் தனியான வரிவடிவம் தோன்றாத காலமாகையால், மன்யோசு பாடல்களின் படியாக்கத்திற்குச் சீனமொழி வரிவடிவம் பயன்படுத்தப்பட்டது. ஆனால், சீனமொழியிலிருந்து ஜப்பானிய மொழியை வேறுபடுத்திக் காட்டும் நிலையிலே படியாக்கம் செய்யப்பட்டமை சிறப்புடையதாகும்.

தமிழ் மற்றும் ஜப்பான் ஆகிய இரு மொழிகளின் இலக்கியப் பாடல்களைத் தரவாகக் கொண்டே இவ்வாய்ப்பு செய்யப்பட்டுள்ளது. தமிழ் மொழி இலக்கியங்களில் சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகையே தரவாக அமைந்துள்ளது. ஜப்பானிய மொழி இலக்கியத்தில் கி.பி. 8–ஆம் நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்ட *மன்யோசு* என்ற தொகுப்பு இலக்கியமே தரவாக அமைந்துள்ளது. இரு மொழி இலக்கியப் பாடல்களும் வாய்மொழி நிலையில் பேணப்பட்டு பின்னர்த் தொகுக்கப்பெற்ற தொகுப்பு நூல்கள் என்ற நிலையிலும் ஒற்றுமைப்பட்டுள்ளன. பாடல்களின் தோற்றகால அடிப்படையில் சங்க இலக்கியங்களின் காலம் கி.மு. 300 தொடக்கம் கி.பி. 300 வரையானது. *மன்யோசு*வின் காலம் கி.பி 7–ஆம் நூற்றாண்டாகும். சங்க இலக்கியத்தில் அகப்பாடல்கள் கூறும் செய்திகளே ஒப்பீட்டிற்குத் தரவுகளாக கொள்ளப்பட்டுள்ளன.

*மன்யோசு* பாடல்கள் 20 தொகுதிகளாக இன்று நூல் வடிவிலுள்ளன. இவை வேறுபட்ட காலங்களிலே பலரால் தொகுக்கப்பட்டுள்ளன. தொகுப்பு முறைக்கென வரையறை செய்யப்பட்ட முறைமைகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. தொகுப்புகளின் வகைப்பா ஒழுங்குநிலையான அமைப்பும் இல்லையென ஜப்பானிய அறிஞர் கருதுகின்றார்[7]. *மன்யோசு* பாடல்களிலே அவற்றுக்கு முன்னர் தோன்றிய *கொஜிகி, நிகொன்சொகி* போன்றவற்றின் குறிப்புகளும் பல இடம்பெற்றுள்ளன. *மன்யோசு* பாடல்கள் மாமன்னர்கள், இளவரசர்கள், இளவரசிகள், புலவர்கள் எனப் பலதிறத்தோரால் இயற்றப்பட்டுள்ளன.

தொகுதியிலே இடம் பெற்ற முதலாவது பாடல் மாமன்னர் *யூர்யகுவினால்* (Yuryaku) இயற்றப்பட்டதாகும். இதைவிட அவைக்களப் புலவர்களால் இயற்றப்பட்ட பாடல்களும் உள்ளன. *ஹிதொமொறொ* (Hitomoro) என்பவர் அவைக்களப் புலவர்களிலே சிறந்தவராக எண்ணப்படுகிறார். இவர் பாடிய 470 பாடல்கள் *மன்யோசு* தொகுப்பிலே இடம் பெற்றுள்ளன. இன்னும் பெயர் அறியப்படாதப் பல புலவர்களுடைய பாடல்களும் இடம் பெற்றுள்ளன. 539 பாடல்கள் பெயர் அறியப்படாத புலவர்களால் பாடப்பெற்றுள்ளன. மேலும் பெண்பாற்புலவர்களுடைய பாடல்களும் *மன்யோசு* தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. *மன்யோசு* பாடல்களின் தொகுப்புகள் பற்றிய பல செய்திகள் பல அறிஞர்களால் வெளியிடப்பட்டுள்ளன. இன்று *மன்யோசு*வில் எழுதப்பட்ட பாடல்களை ஜப்பானிய மொழிக்கென பிற்காலத்தில் அமைக்கப்பட்ட வரிவடிவத்திலே எழுதிப் படியாக்கம் செய்யப்பட்ட தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

*மன்யோசு* பாடல்கள் தொகுக்கப்பட்ட இடங்களும் கூடச் சில இடங்களிலே தரப்பட்டுள்ளன. அவை சீனமொழி எழுத்துக்களிலே எழுதப்பட்டுள்ளன. *கண, மன்யோகண* என்ற இருவகை எழுத்துக்களிலே பாடல்கள் அமைந்துள்ளன. தங்க (tanka), *சோக* (choka) என்ற இருவகையான பாடலமைப்புகள் காணப்படுகின்றன. *தங்க* 5–7–5–7–7 என்ற அடை அமைப்பிலும், சோக 5–7–5–7–7–7 என்ற அசையமைப்பிலும் பாடப்பட்டுள்ளன. *மன்யோசு*வில் 260 *சோக* அசையமைப்பிலும் பாடல்களுண்டு. அடிகள் திரும்பத் திரும்ப வருகின்ற பாடல் *பங்க* (banka) என அழைக்கப்படும். சோக பாடல்கள் *பங்க* பாடல்களுடன் சேர்ந்தே அமைந்துள்ளன. மூன்றாவது பாடலமைப்பாக *செதோக* (sedoka) அமைந்துள்ளது. இதில் 5–7–7 அசை நிலை அமைப்பு இரண்டு முறையாக அமையும். இவ்வகையில் *மன்யோசு*வில் 60 பாடல்கள் காணப்படுகின்றன. 6 அடிகள் கொண்ட 5–7–5–7–7–7 அசை நிலையமைப்புப் பாடல்கள் வெகு குறைவாகவே உள்ளன. 8–ஆவது தொகுதியாக *ரென்க* (renga) என அழைக்கப்படும் தொடர் பாடல்களும் காணப்படுகின்றன[9]. பாடல் முழுவதும் 31 அசைகளைக் கொண்டதாக அமையும். எனவே, குறும் பாடல்களே *மன்யோசு* தொகுதியில் பெரும்பான்மையாக இடம் பெற்றுள்ளன.

உண்மையாக உணர்வு நிலையைப் புலப்படுத்தல், இயற்கையை ஊன்றி நோக்கம் பன்பு என்பன, *மன்யோசு* பத்தாம் தொகுதியில் இடம் பெற்றுள்ள பாடல்களிலே வெளிப்படுத்தப்படுகின்றன. காதலுணர்வைப் பிரதிபலிக்கும் பாடல்களே. இயற்கை நிலைகள் பொறுத்தமுற இணைக்கப்பட்டுள்ளன. குறுகிய பாடல்களிலே அக்கால மக்களின் வாழ்க்கை நடைமுறைகள், நம்பிக்கைகள், வழிபாட்டு மரபுகள், பழக்கவழக்கங்கள் என்பன தெளிவாக

விளக்கப்பட்டுள்ளன. இயற்கையுடன் இணைந்திருந்த மக்களின் வாழ்க்கை நிலை என்பன தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இயற்கையுடன் இணைந்திருந்த மக்களின் வாழ்க்கை நிலை என்பன சிறப்பாகப் பாடல்களின் பொருளாக்கப்பட்டுள்ளது. காதலுணர்வுகள் இயற்கை நிலையில் உள்ளுறை பொருள் விளக்கமாகவே அமைக்கப்பட்டுள்ளன. மேலும், *மன்யோசு* பாடல்களில் இடம் பெற்றுள்ள *மகுரகொதொப* என அழைக்கப்படும் தொடர் பாடலிலே பொதிந்துள்ள உள்ளுறை பொருளை உணர்த்தவல்லது. இதனைத் தமிழ் நேர்மொழி பெயர்ப்பில் ‘தலையணைத் தொடர்’ எனக் கூறலாம். ஆனால், ஜப்பானிய இலக்கிய அறிஞர்கள் தலையணைத் தொடருக்கும் பாடற் பொருளுக்குமுள்ள தொடர்நிலையைக் கவனத்திற் கொள்ளவில்லையென்றே கூற வேண்டும்[10].

*மன்யோசு* பாடல்களைத் தமிழில் எழுந்துள்ள சங்கப் பாடல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இரண்டு மொழிப் பாடல்களும் பொருளமைதியில் பெரிதும் ஒற்றுமையுடைதாயிருப்பது தெளிவாகத் தெரிகின்றது. இயற்கை நிலையிலே மனித உணர்வுகளைப் புலப்படுத்துகின்ற தன்மையில் சங்க அகப்பாடல்களும் *மன்யோசு* பத்தாம் தொகுயிலுள்ள பாடல்களும் சிறப்பாக ஒற்றுமைப்பட்டுள்ளன. ஒரு சில மன்யோசு பாடல்களைச் சங்க அகப் பாடல்களோடு ஒப்பிட்டு விளக்கும் முயற்சியில் உருவானதே இக்கட்டுரை. மனோன்மணி சண்முகதாஸ் இதுவரையில் 500 *மன்யோசு* பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அந்த மொழிபெயர்ப்பினை மூலமாகக் கொண்டே இக்கட்டுரை படைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| *பரு யம நொ* | வேனில் மலையின் |
| *கிரி நிமதொபெரு* | புகார் வழிமயங்கு |
| *உகுபிசுமொ* | *உகுபிசு*வும் |
| *வரெ நி மசரிதெ* | என்னினும் உயர்ந்ததோர் |
| *மொநொ ஒமொபமெ ய*[11] | பொருளை எண்ணியதே |

குளிர்காலம் கடந்து இளவேனிற் காலம் மெல்லத் தலை நீட்டுகிறது. எனினும் இன்னமும் பனியின் புகை மூட்டம் கலையவில்லை. மாலைக் காலமானதும் மலைச் சரிவெங்கும் பனிப் புகை மண்டிக் குவிகிறது. பகலெல்லாம் பறந்து திரிந்து இரை தேடிய பறவைகள் மாலையில் தமது வதியிடம் நோக்கி விரைந்து பறக்கின்றன. எங்கெல்லாமோ சென்று இரைத் தேடித் தனது கூட்டையே குறியாகக் கொண்டு பறந்து செல்லும் *உகுபிசு* பறவை ஒன்று, “ஏன் அது ஓரிடத்தில் சுற்றிப் சுற்றிப் பறக்கிறது. வழி தெரியவில்லையோ ? மாலையில் வந்து மண்டும் பனிப் புகாரில் அதுவும் வழி மயங்கிப் போய்விட்டது. தனது இணைப் பறவையைக் காண விரையும் சமயத்தில் இப்படி வழி தவறித் தடுமாறுகிறதே !. என்னைப் போலவே அதுவும் மனம் நிறையத் தன் துணையின் எண்ணமாக வந்து கொண்டிருந்ததோ ! அதனால் வழியைக் கவனத்திற் கொள்ளவில்லை. இப்போது தடுமாறி அங்குமிங்குமாக வழி தேடிப் பறக்கிறது.” இவ்வாறு தலைவி கூறுவதாக அமைந்துள்ளது.

அவரோ வாரார் தான் வந் தன்றே
குயிற்பெடை யின்குர லகவ
வயிர்க்கேழ் நுண்ண னுடங்கும் பொழுதே[12]

இளவேனிற் காலம் வந்தவிட்டதைக் குயிலின் குரல் உணர்த்துகிறது. குயிற்பேடு இனிய குரலால் தன் காதற்றுணையைக் கூவி நிற்கிறது. பொருள் தேட்டத்திற்காகப் போகும் போது ‘இளவேனில் காலத்தில் வந்துவிடுவேன்’ என்று சொல்லிப் பிரிந்து போனான் தலைவன். அவளும் அக்காலம் வரும் வரை தன் மனதை ஆற்றி அவனுக்காகக் காத்திருந்தாள். ஆனால், இந்தக் குயிலின் குரல், அது தன் துணையை அழைக்கும் அகவல், அவள் செவியில் விழுந்து வேனிற் பொழுதும் வந்து விட்டதைக் கூறியது. குயில் பருவங் கண்டு சேரும் உணர்வெழத் தன் துணையைத் தேடிக் குரல் கொடுக்கிறது. இயற்கை நிலையிலே காலம் வந்துவிட்டதை எல்லாரும் அறிய குயிலின் அகவலே உதவுகிறது. பறவைகளும் துணை தேடி இன்பங்காணும் வேனிற் காலம். தலைவன் திரும்பி வந்து தலைவியைச் சேரும் காலம். ஆனால், அவன் காலம் வந்தும் வரவில்லை. அவன் சென்றிருக்குமிடத்துக் குயில்களும் இப்போது துணையைத் தேடிக் கூவும். அந்த அகவற் குரல் அவன் காதிலும் விழும். அது கேட்டு, ‘இளவேனிலில் வருவேன்’ என்ற உறுதிமொழி ஞாபகத்திற்கு வரும். என்னை நாடி அவனும் ஓடி வருவான். இயற்கையின் உண்மைத் தோற்றங் கண்டு தலைவி தன் மனத்தினை ஆற்றும் நிலை இது. ஆற்றாமையும் துன்பமும் அளவுக்கு மிஞ்சிய போதும் தன் நம்பிக்கை இழந்துவிடாத பெண்மையின் கற்பு நிலை இது.

இந்த இரு பாடல்களிலும் பறவைதான் உணர்வைக் காட்டும் குறியீடு நிலையிலுள்ளது. சங்கப் பாடலிலே குயில்; *மன்யோசு* பாடலிலே *உகுவிசு*. இரண்டு பறவைகளும் துணை தேடும் உணர்விலுள்ளன. இது காதலியரின் உணர்வை உள்ளுறையாகக் காட்டப் பயன்பட்டுள்ளது. பறவைகளின் இயற்கையான வாழ்க்கை நெறிமுறை மனிதர்களின் வாழ்க்கை நெறிமுறையோடு தொடர்புடைய நிலையில் விளக்கப்பட்டுள்ளது. மனிதரும் பறவைகளும் காதலுணர்வு நிலையிலே

ஒருமைப்பட்டுள்ளனர் எனக் காட்டும் புலவர்களின் நுட்பமான கற்பனை.

சங்கப் பாடல்கள் காட்டும் பெண்மனம் துன்பத்தைச் சொற்களிலே வெளிக்காட்டும் பண்பு கொண்டது. 'அவரோ வாரார்' என்று உள்ளத்து உணர்வை அப்படியே வெளிப்படுத்தி அவலப்படுகிறது. இதற்குக் காரணம் அவள் தன் தோழியிடம் உள்ளத்து உணர்வை மறைப்பதில்லை. ஆனால், *மன்யோசு* காட்டும் காதலியோ தனித்தவள். 'என்னைப் போல ஏதோ நிறைவான பொருள், எண்ணி வழி மயங்கும் பறவை' என்று எண்ணும் அவள் துயர உள்ளம், தன் துன்பத்தோடு பிறர் துன்பத்தையும் எண்ணிப் பார்க்கும் கருணை உள்ளம். இப்பண்பு வெகு நுணுக்கமாக *மன்யோசுப்* பாடலில் பதியப்பட்டுள்ளது. சங்கப் பாடல் காட்டும் பெண், தோழி உடனிருப்பதால் தனித்தவளல்லள். துயர் கூறி ஆறத் துணை பெற்றவள். எனினும் அவ்வாறு துணை பெற்றிருந்தும் தன் துயரே பெரிதெனக் கருதி வருந்துகின்றாள். *மன்யோசு* காட்டும் துணையற்ற மனமோ காதலனும் தன்னைப் போலவே துன்புறுவான் என எண்ணிப் பார்த்து அவன் வரும் வரை காத்திருக்கவும் முடிவு செய்கிறது.

| | |
|---|---|
| *வொமிநபெசி* | *வொமிநபெசி* |
| *சகு நொ நி ஒபுரு* | அலர் வயலில் தோன்றும் |
| *சிரதுதுசி* | வென் மலரே போல் |
| *சிரநு கொதொ மொதி* | அறியாப் பொருள் பற்றிச் |
| *இபஎசி வக செ*[13] | சொன்ன என் காதலரே |

வேனில் வந்துவிட்டால் ஊரெல்லாம் திருவிழாதான். பொருள் தேடிப் பிரிந்த கணவர்கள் வீடு திரும்புவர். அவர்கள் தேடிக் கொணர்ந்த பொருள்கள் எங்கும் திருவிழாவின் தோற்றமாகிவிடும். இங்கு ஓர் இளம் மனைவி, வயதிலும் சிறியவள், மென்மையான உள்ளங் கொண்டவள். பிரிந்து போன கணவனின் வரவை எதிர்பார்த்திருக்கும் போது ஊராரின் அலறல் காதில் வேல் பாய்ச்சும். இப்பாடலில், *வொமிநபெசி* மலர் மலர்ந்து விட்டது. அந்த மலரின் அழகு, வெண்மஞ்சள் மலர்கள். மாலைக் கதிரவனின் பொற் கிரணங்கள் பட்டுப் பொன் போலச் சுடர் விட்டு நிற்கின்றன. வெட்ட வெளியில் மரத்தில் மலர்த்திருக்கும் அந்த மலர்கள் விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே வண்ணக் கோலம் போடுகின்றன. இன்னும் சில நாட்களில் அந்த மலர்கள் வாடி உதிர்ந்து விடும். ஆனால், பிரிந்து பொருள் தேடிப் போனவனோ இன்னமும் திரும்பி வரவில்லை. இளம் மனவையின் உள்ளம் ஏங்கித் தவிக்கிறது. என்ன இன்னலுற்றானோ என்று மனம் பதைத்துத் துடிக்கிறது. அவன் இன்னும் திரும்பி வரவில்லையே என்று ஊரார் வம்புப் பேசத் தொடங்கிவிட்டனர். அவனும் அவளும் ஊரார் வாயில் அரைபடுகிறார்கள். அவனது பிரிவின் துயரைவிட இந்தப் பேச்சுகளின் வேதனைதான் பெரிதாகி விட்டது. அவர்கள் அறியாமற் பேசுகிறார்கள். நீ இந்தச் சொற்களைக் கேளாமல் ஒண் மலர்களையும் காணாமல் வெகு தூரத்திலே நிற்கிறாய். உன்னைப் பற்றி எனக்கு மட்டுமே தெரியும். இந்த *வொமிநபெசி* மலர்களும் சிறிது காலம் தாழ்த்திப் பூத்திருக்கலாமே. இவ்வாறு அவள் உள்ளம் தனக்குள்ளே பேசி மாய்கிறது.

இருவரும் பிரிந்து எத்தனையோ காத தூரம் கடந்து இருக்கிறார்கள். எப்படி அவனால் அவளுடைய மன நிலையைக் காண முடியும் ? இங்கேதான், *மன்யோசு* புலவர் இயற்கை இருவருக்குமிடையே தூது செல்லும் எல்லையைக் காட்டுகின்றார். பிரிந்து போனவன் சென்ற இடத்திலும் இந்த *வொமிநபெசி* மலர்கள் மலர்ந்திருக்கும். மலர்களைக் கண்டவுடன் அவனுக்கு ஊர் மக்கள் அவர் நினைவுக்கு வரும். அவளின் துன்பமும் மணக்கண்ணில் தெரியும். உடனே ஊர் திரும்பி விட முடிவு செய்வான். 'அறியாப் பொருள் பற்றிச் சொன்ன ' என்னுந் தொடர் அவள் தன் காதலனுக்கு நேரிலே தன் துன்பத்தை எடுத்துச் சொல்லுவதாக அமைந்துள்ளது. 'என் காதலரே ' என அடுத்து வரும் தொடர் அதனை மேலும் விளக்கமாக்குகின்றது. 'என் காதலரே' நீ நேரில் வந்தால்தான் நான் இப்போது அனுபவிக்கும் துன்பந் தீரும். இந்த வேனில் மலர்கள் உதிர்ந்திடும் முன்னர் நீ வந்திட வேண்டும்.

கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றயல் எழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிர் மிதித்த ஒரு பழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென் றவ்வே.[14]

வேம்பு மலர்ந்து விட்டது, வேனில் வந்து விட்டது, ஆனால் பிரிந்து சென்றவரோ இன்னும் வரவில்லை. மலர்ந்து மலர்களைச் சூடும் நிலை இல்லைப் போலத் தெரிகிறது. அவள் பொறுமையோடு காத்திருந்தாள். ஆனால், காலமும் ஊருந்தான் காத்திருக்கவில்லை. அவை தன் நிலைக்கேற்ப இயங்கத் தொடங்கி விட்டன. ஆற்றங் கரையிலே ஓங்கி நிற்கின்ற அத்தி மரம் அதன் கிளைகளில் பழுத்திருந்த பழம் ஒன்று நழுவிக் கீழே விழுந்தது. மரத்தடியில் இருந்த நண்டுக்

கூட்டம் அந்த ஒற்றைப் பழத்தைக் கால்களால் நசுக்கித் துவம்சம் செய்கின்றன. அவள் கற்பனை செய்த காட்சி இது. வேனில் மலர்ந்த வேம்புதான் எல்லாவற்றிற்கும் காரணம். அதன் மலர்ச்சிதானே வேனிலைப் பறை சாற்றியது. அண்டை அயலார் அவன் இன்னமும் வரவில்லையே என அவளைக் கேட்டுக் குதறத் தொடங்கி விட்டனர்.

அக வாழ்க்கையில் பிரிவு என்பது ஒரு முக்கியமான நிகழ்வு. அதை ஆணும் பெண்ணும் ஆற்றியிருத்தல் மரபு. ஆனால், அவ்வாறு ஆற்றியிருக்கும் போது ஏற்படும் இடர்ப்பாடுகள் இரு மொழிப் பாடல்களிலும் சுட்டப்பட்டுள்ளன. கருப்பொருள் நிலையில் வேனிற் காலத்து மலரும் மலர்கள். முதற் பொருளான காலத்தையும் அம்மலர்களே காட்டுகின்றன. குறுந்தொகைப் பாடலில் 'வேம்பின் ஒண்பூ' என்ற தொடரே காலத்தையும் மறைமுகமாக விளக்கி நிற்கின்றது. உரிப்பொருள் பிரிவு அதைத் தெளிவாக விளக்க ஊரலர் அமைகிறது. சங்கப் பாடலும் *மன்யோசு* பாடலும் பெண்களின் பிரிவின் வேதனைக் குரலில் ஒழுக்க நிலையை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. ஆணின் ஒழுக்கம் பேணப்பட வேண்டும். பெண்ணிள் பொறுமையே ஆணின் ஒழுக்கத்தை வளர்க்கும்.

| | |
|---|---|
| *சநிதுரபு* | செங்கன்னமுடைக் |
| *இமொ வொ ஒமொபு தொ* | காதலியை எண்ணிடின் |
| *ககமிதது* | புகார் தவழும் |
| *பரு பி மொ குரெ நி* | வேனில் நாளின் கருமையில் |
| *கொபி வதரு கமொ*[15] | காதல் கழியுங் கொலோ |

பொருள் தேடுவதற்காக ஆண் மகன் மனைவியைப் பிரிந்து நெடுந் தொலைவு செல்வதுண்டு. இப்பாடலிலும் ஆண் அவளைப் பிரிந்து வந்து பல மாதங்கள் கடந்தது உணர்த்தப்பட்டுள்ளது. நெடுந்தூரம் வந்து விட்டான். எனினும் அவள் நினைவுகளுடன் தான் வாழ்கிறான். இயற்கை மாற்றங்களைப் பார்க்கும் போது காலம் மாறுவது தெரிந்தது. வேனில் நாளின் புகார் நெருங்கிப் படர்ந்து கருமைக் கோலங் காட்டி நிற்கிறது. மலையில் வந்து மண்டும் புகாரின் அடர்வு அதன் கருமையை மேலுங் கூட்டுகிறது. மாலை நேரம், புகாரின் தோற்றம். இவை இரண்டும் அவனை அவள் பால் இழுத்துச் செல்ல முற்படுகின்றன. உடனே. காதலியின் மேனியைப் பற்றிய எண்ணம் மனதில் தலை நீட்டுகின்றது. சிவந்த அவள் கன்னம் தான் முதலில் அவன் நினைவில் தோன்றுகின்றது. அந்தச் செங்கன்னம் காதலனைக் கண்டவுடன் இன்னும் செம்மைக் கூடி அழகு பெறும். நாணத்தினால் செம்மை சேர அவள் கன்னம் அழகு பெறுவது அவன் மட்டுமே அறிந்தது. கடந்த காலத்துக் காதல் நினைவுகளுடன் அவளுடைய கன்னங்களையே கற்பனை செய்து நிற்கிறான்.

திருமணம் முடிந்து இருவருமாக இணைந்து நடத்திய இன்ப வாழ்வு இந்தப் பொருள் தோட்டத்தால் மாறிவிட்டது. அவனும் அவளும் தூரத்தால் பிரிக்கப்பட்டு, நினைவால் மட்டும் இன்ப வாழ்வு நடத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. காதல் உணர்வுகளுக்கு வடிகாலின்றி இருவருமே வாடி நிற்கின்றனர். வேனில் நாளின் புகாரின் கருமை போல தன் காதல் நினைவும் வளர்கிறதே என அவன் மனவேதனைப் படுகின்றான். ஆண் மகன் மனத்துன்பத்தை வெளிக்காட்ட முடியாது. வீரமற்றவன் என்று மற்றவர் கேலி செய்வர். அதனால் தன்னளவிலே மனதில் துன்பப்பட்டு மறுகுகிறான்.

*மன்யோசு* பாடலில் புலவர் ஆணின் மனத்து நிலையை விளக்க இயற்கைக் காட்சியைத் துணையாகக் கொண்டுள்ளார். அவன் மனதிலே படும் துன்பத்தை நேரே பார்த்தவர் போல புலவர் விளக்க முற்படுகிறார். பிரிந்துவந்த பின்பு இயற்கையையும் ஊன்றிக் கவனித்தான். அவள் எண்ணம் மனதிலே வந்து நிறைய அந்த நினைவின் சுகத்திலே காலம் கழிக்கும் நிலைபெற்றான். பிரிவுத் துயரை எண்ணிப் பார்ப்பதில் மறக்க முயல்கிறான். பிரிந்த பொருளை எண்ணியிருப்பின் பிரிவு அதனோடு இல்லையென்றாகிவிடும்.

சங்கப் புலவர்களும் இதே உணர்வை வெளிப்படுத்தியிருப்பதை அகப்பொருள் பாடல்களின் மூலம் தெளியலாம்.

நயனின் றமையிற் பயனிது வென்னாது
பூம்பொறிப் பொலிந்த அழலுமிழ் அகன்பைப்
பாம்புயி ரணங்கி யாங்கும் ஈங்கிது
தகாஅது வாழியோ குறுமகள் நகாஅது
உரைமதி உடையுமென் உள்ளஞ் சாரல்
கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போலச்
சேயரி பரந்த ஆயிழை மழைக்கண்
உறாஅ நோக்கம் உற்ற என்
பைதல் நெஞ்சம் உய்யு மாறே[16]

இப்பாடலில் தன் காதலியைப் பிரிந்த ஆண் மகன் ஒருவனின் நெஞ்சத்துக் குரல்தான் கேட்கிறது. இனிமேல் காதலியைக் காண முடியாதே என வருந்தி நிற்கும் நிலை. பிரிவு அவனைப் பெரிதும் அல்லலுறச் செய்கிறது. பைத்தியம் போலத் தோன்றும் அவனைக் கண்டு மற்றவர் கேலி செய்யும் நிலைதான். பிரிவு அவன் உள்ளத்தையும் உடலையும் பெரிதும் பாதித்துள்ளது. அவனுடைய நிலை கண்டு தலைவியின் தோழி பரிகாசம் பண்ணுகிறாள். ''உன் காதலி தூரத்திலிருக்கிறாள் அவளை நீ காணமுடியாது'' என்று நகையாடுகிறாள். அவளுடைய கேலி பொறுக்காமல் துன்புறும் ஆண் மகனைப் புலவர் காட்டுகிறார்.

பாம்பு கடிப்பது போல என்னை நீயும் வருத்தாதே என்று அவன் கெஞ்சுங் குரல், அழல் போன்ற கொடிய நஞ்சுடைய பாம்பு கடித்தால் ஏற்படும் கடுப்பு வலிபோலத் தோழியின் சொற்களால் வேதனைப்படுகின்றான். தோழியோ அவனுடைய மனநிலை அறியாமல் வார்த்தையாடுகின்றாள். காதலியின் தோற்றத்தையே எண்ணி வருந்தும் அவன் குரல், 'நீயும் என்னைப் பரிகசிக்காதே. வேட்டுவனது பன்றியைக் கொன்ற அம்பின் ஓரத்திலே காணும் செம்மை. அது போன்ற செவ்வரி படர்ந்த அழகிய கண்கள். அவற்றை நான் மீண்டும் காண வேண்டும். அப்போதுதான் என் நெஞ்சம் மகிழும்; உயிரும் பிழைக்கும்' என தன்னுடைய நிலையை உள்ளவாறு ஒலிக்காமல் சொல்கிறான்.

அவன் தன்னிலை மறந்துவிட்டான். அவளைக் காண வேண்டும் என்ற ஆவலிலே யாவற்றையும் துறந்துவிட்டான். ஆணின் மன உரம் மறைந்துவிட்டது. பிரிவின் வெம்மையும் துன்பமும் அவன் சிந்திக்கும் ஆற்றலையும் வழி இழக்கச் செய்துவிட்டன. 'நெஞ்சம் உய்யுமாறே' என பேதைபோல் புலம்புகிறான். தோழி அவனைப் பற்றி நன்கு அறிந்தவள். அதனால்தான் சற்று வேதனைப் படுத்த எண்ணி எள்ளி நகையாடினாளோ. இந்த ஆண்மகன் தன் உள்ளத்திலே நிறைந்திருந்த அவள் நினைவிலேயே இயங்குகிறான். செம்மை படர்ந்த காதலியின் கண்களின் காதல் நோக்கு அவனைப் பித்தனாக்கிவிட்டது. தன்னிலையையும் மறக்க வைத்தது. பிரிவின் வேதனை மானவுணர்ச்சியை மறைத்துவிட்டது. அவன் தான் விரும்பும் காதல் நோக்கைக் காண வேண்டும் என்று வெட்கத்தை விட்டே வெளிப்படையாக இன்னொரு பெண்ணான தோழியிடம் சொல்கிறான்.

காதல் உணர்வின் தாக்கம் சங்கப் புலவர் பாடலுக்கு அமைந்த பொருள். *மன்யோசு* புலவரும் இதனையே பொருளாகக் கொண்டுள்ளார். ஆனால், இருவரிலும் ஒரு சிறிய வேறுபாடு. சங்கப் புலவர் ஆணின் மனவுறுதி குலைந்துவிட்டதை நிரூபித்துக் காட்டுகிறார். அதனைக் கண்ட, கேட்ட சாட்சியாகத் தோழி நிற்கிறாள். 'வாழியோ குறுமகள்' என்ற தொடர் இதற்குச் சான்றாகவுள்ளது. *மன்யோசு* புலவர் காட்டும் ஆண் இன்னமும் அந்த நிலையை அடையவில்லை. பிறரிடம் தன் ஆவலைக் கூற முடியவில்லை. தன்னளவிலே தன் மனத்திலே மட்டும் காதலியைக் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறான். சங்கப் பாடலிலே கொடிய விஷமுள்ள பாம்பின் தன்மை காதலனின் நேரில் நிற்கும் தோழிக்கு உவமையாக்கப்பட்டுள்ளது. விஷம் தீண்டியவர் துன்பத்தை, தீண்டிய விஷ ஜந்து உணரமுடியாது. இரு ஆண்களும் காதலிமாரின் சிவந்த நிலை பற்றி எண்ணுவதில் ஒற்றுமைப்பட்டுள்ளனர். செங்கன்னமும். செவ்வரி படர்ந்த கண்ணின் நோக்கும் ஆண்களின் நினைவிலே நிற்கின்றன. நாணத்தின் செம்மையும், காதலின் உணர்வும் ஒன்றுகூடிய இன்ப நிலையை இரண்டு ஆண்களும் மீண்டும் அடையத் துடிக்கின்றனர்.

| | |
|---|---|
| *பருசமெநி* | வேனில் மழையில் |
| *கொரொமொ வ் இதகு* | ஆடை நனைந்திடவே |
| *தொபொரமெ ய* | செல்வாயோ நீயே |
| *நநு கசி புரப* | ஏழுநாளும் பொழியின் |
| *ந ந யொ கொசிதொய*[17] | ஏழிராவும் வாராயோ |

விடிந்த வேளை தொடக்கம் மழை பெய்கிறது. கருக்கல் பொழுதிலே பெய்யத் தொடங்கிற்று. இன்னமும் விட்டபாடில்லை. வேனில் மழையின் சங்கீத நாதம் அவள் காதிலே தேனாக விழுகிறது. இரவு வந்த காதலன் இன்னும் திரும்பிப் போகாமல் தங்கி நிற்கிறான். மழை பெய்கிறது. இன்னுஞ் சற்று நேரத்தில் விடிந்து விடும். இருள் பிரிந்து விடும். இருள் பிரிகின்ற நேரம் வந்தாலே அவளுக்குத் துன்பந்தான். இந்த இரவு இன்னமும் நீளக்கூடாதா என்று ஒவ்வொரு நாளும் ஏங்குவது அவள் வழக்கம். காதலனோடு கூடி இருக்கும் இன்பத்தைத் தடுக்கும் விடியலை அவள் விரும்புவதே இல்லை. இன்றைய விடியற்காலை மழை அவளுடைய மனத்திற்கு மகிழ்வு தருகிறது. அவன் பிரிந்து போவதைத் தடுக்க வழி செய்திருக்கிறது. இந்த மழை, குடை பிடித்தாலும் இந்தக் கொட்டும் மழை உன் ஆடைகளை நனைத்துவிடும். இன்னும் இந்த மழை மேலும் தொடர்ந்து பெய்யலாம். அப்படியெனில், நீ தொடர்ந்து ஏழு இராக்கள் இங்கே வரமாட் டேன் என்று சொல்வாயோ ? என்ன மதிநுட்பமான கேள்வி. அவன் எப்படி விடை சொல்வது ? விக்கித்துப் போய் நிற்கின்றான்.

''ஏழிராவும் வாராயோ'' என்ற காதலியின் கேள்வி அவனையும் சிந்திக்கத் தூண்டுகிறது. ஏழிரவுகள் அவனைக் காணாமல் அவனாலும் இருக்க முடியாது. எனவே, அவனுடைய உள்ளத்து உணர்வையும் அவள் அறிந்துதான் கேட்டாள்.

இரவில் மட்டுமே இருவரும் கூடி வாழ்கிறோம் என்றாலும் ஒவ்வொரு நாளும் இணையும் வாழ்க்கை பிரிவு என்ற சொல்லுக்கே இடமில்லை. இந்த மழை தொடர்ந்தால் எம் பிரிவும் தொடரும். என் உடல் நலமும் மழையில் நனைந்தால் கெடும். எனவே, மழை தொடராவிடினும் என் உடல் நலங் கெட்டால் நான் அவளைக் காண வரமுடியாது. என் உடல் நலத்தின் மீது கொண்ட அக்கறைதான் அவள் கூற்றுக்கான முக்கிய காரணம். அவனும் எண்ணிப் பார்த்துத் தெளிவு பெற்றான். ஆண் மனம் வலியது. உடல் உபாதை பற்றிக் கவலை கொள்ளாதது. இயற்கை அமைப்பிலும் ஆணுக்கே உடல் வலிமை அதிகம் என்றாலும் பெரு மழையிலே நனைந்தால் வலிய உடலின் நலமும் கெடும் என எண்ணும் அந்த அன்பு மனம், தாய்மை மனம் அவன் கண்டு வியந்து நிற்கிறான். மறைமுகமாக அவள் சொல்லுகின்ற இன்னொரு செய்தி, 'நீ ஏழிராக்கள் என்னைக் காண வராமலிருப்பது கொடுமையான செயல். என்னால் அந்தக் கொடுமையைத் தாங்க முடியாது. உன் நினைவால், உன் பிரிவால் நான் உயிரோடு இருப்பது முடியாத காரியம். என் துன்பம் நீ அறிய வேண்டும். 'ஏழிராவும் வாராயோ' என்ற தொடரே இப்பொருளையும் மறைமுகமாக உணர்த்துகிறது.

மாமழை யிடியூ உத்தளிசொரித் தன்றே
வாணுதல் பசப்பச் செலவயர்ந் தனையே
யாமே நிற்றுறந் தமையல
மாய்மல ருண்கணு நீர்நிறைந் தனவே[18]

இச்சங்கப் பாடலில் தலைவியின் சார்பில் தோழியே கேள்வி கேட்கின்றாள். மழை பெய்கிறது. கரிய முகில்கள் இடித்து முழங்க பெருமழை பொழிகிறது. இந்த நேரத்தில் நீ பொருள் தேடிப் போக முடியுமா ? எங்களால் உன்னை விட்டுப் பிரிந்து வாழ முடியுமா ? உன் காதலியின் மலர் போன்ற மையுண்ட கண்களிலே கண்ணீர் நிறைந்து நிற்கிறது. இதைக் கண்டுமா நீ பொருள் தேடிப் போக எண்ணுகிறாய் ? தலைவியின் தோழி கேட்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. 'செலவயர்ந்தனையே' என்ற தொடர் பெண் உள்ளத்து வேதனையை வெளிப்படுத்துகிறது. இப்போதைய காலநிலையிலே மழைக் காலத்தில் பிரிந்து போகும் நீ என்னென்ன அல்லல்களுக்கு ஆளாக நேரிடுமோ என்று தலைவி அஞ்சுகிறாள். அவள் உன்மீது கொண்டுள்ள பரிவு எல்லையற்ற அன்பு அவளை வேதனைப்படுத்துகிறது. தோழி தலைவனிடம் தலைவியின் நிலையை விளக்குகிறாள்.

தலைவியின் மன வேதனையை அவளுடைய கண்கள் வடிக்கின்ற கண்ணீர்த் துளிகள்தான் வெளிப்படுத்துகின்றன. பிரிவு நிகழ்வதற்கு முன்பே பேதைப் பெண் கண்ணீர் பெருக்குகிறாள். அவன் பிரிந்து போய்விட்டால் உயிர் வாழ மாட்டாள் . தோழியின் வார்த்தைகள் அவன் சிந்தனையைத் தூண்டுகின்றன. சங்கப் பாடலில் பொருள் நீட்டப் பிரிவு என்பதால் ஆண் தொலை தூரம் செல்ல வேண்டியுள்ளது . *மன்யோசு*விலே 'இரா' என்ற சொல் நாளாந்தம் இரவிலே மட்டும் அவர்கள் சேர்வதைக் காட்டுகிறது. பொருட் பிரிவு நெடுந்தூரமெனில் எத்தனையோ இரவும் பகலும் பிரிந்திருக்க வேண்டும். எனவே, இப்போது பொருட் பிரிவு வேண்டாம் எனத் தோழி தலைவனிடம் கூறி நிற்கிறாள். *மன்யோசு* பெண் தன்னிலையைத் தானே வெளிப்படுத்துகிறாள். அதனால் கேட்பவர் மனதிலே தன் மனத் துயரம் நன்கு விளங்கக் கூறுகிறாள். நடப்பதைத் தடுக்க இரு பெண்களும் இயற்கை நிலையைத்தான் துணையாகக் கொண்டுள்ளார்கள். சங்கப் பாடலில் வரும் 'தளி சொரிநதன்றே' என்ற தொடர் நேரடியான நிகழ்வைக் காட்டி அவளைத் தடுக்கும் தகுந்த காரணமாய் அமைந்துள்ளது. ஆனால், *மன்யோசு*வில் 'ஏழுநாள் பொழியின்' என்ற தொடர் அவள் மனத் திருப்பத்தை மறைமுகமாகக் காட்டி, வெளிப்படையில் மழையின் ஏழுநாள் பொழிவை அவள் ஊகமாக்கித் தடுப்பதாக அமைந்துள்ளது.

இருமொழிப் புலவர்களும் குறுகிய பாடல்களிலே வெகு நுணுக்கமாகப் பிரிவுணர்வினைப் பாடியுள்ளனர். பாடல் விளக்கும் பகைப்புலத்திலே *மன்யோசு* வேனில் மழையின் பொழிவையும், சங்கப் பாடல் கார்கால மழையின் பெயரையும் அமைத்துள்ளன. பிரிவின் வேதனையால் பெருகும் கண்ணீரின் வெளிப்பாடும் இம்மழைப் பொழிவின் குறியீட்டுப் பொருளாக அமையும். ஏழிரா கண்ணீர் வடிக்க வேண்டிய *மன்யோசு* பெண். கார் காலம் முழுவதும் கண்ணீர் பெருக்க வேண்டிய சங்கப் பெண். எனவே, உணர்வின் தன்மையை ஆழமாக உய்த்துணர வேனில் மழையும், கார்காலப் பெருமழையும் விரிந்த பொருள் உணர்த்தும் கருப்பொருளாகின்றன.

| | |
|---|---|
| *ககுசி அரப* | இப்படியெனில் |
| *நநி க உவெ கெமு* | ஏனோ வளர்த்திடுவேன் |
| *யமபுகி நொ* | *யமபுகி*போல் |
| *யமு தொகி மொ நகு* | விடவும் வேளையில்லாக் |
| *கொபுரகு ஒமொபெய*[19] | காதலை எண்ணிடினே |

அவள் அருமையாகக் பயிரிட்டுப் பார்த்து வளர்த்த *யமபுகிச்* செடி இன்று சடைத்து வளர்ந்து நிற்கிறது. வேனிலில் மலரும்

மலர் *யமபுகி* அவன் திரும்பி வருங்காலத்தில் அது மலர்ந்து நிற்கும் என்று எண்ணியே வளர்த்தாள். அவன் திரும்பி வந்து அந்த மலர்களைப் பார்த்து மகிழ்வதையே கற்பனை செய்து காத்திருந்தாள். சடைத்திருந்த செடியின் நிறைந்த மலர்க் கூட்டம். *யமபுகி*யின் மலர்கள் ஒற்றை இதழ்கள் கொண்ட மஞ்சள் நிற மலர்கள். செடியில் மலர்கள் நிறையப் பூத்திருக்கும் கோலம். பசுமையுடன் மஞ்சள் விரவிய கலவைக் கோலம். எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அத்துணை அழகு. வேனிற் காலத்து இளவெயிலில் அந்த மலர்கள் சிரிக்கும் தோற்றம்.

அவள் அதை நீருற்றி வளர்க்கும் போதெல்லாம் அவன் வரவையும் கற்பனை செய்வாள். பனி பெய்யுங் காலத்திலே அந்த *யமபுகி* இலையுதிர்ந்து வெறுங் காம்புகளுடன் நின்ற காட்சி. அப்போது *யமபுகி* அவனில்லாமல் தான் தனிமையிலிருப்பது போன்று வெறுமைக் கோலம் பூண்டு நிற்கிறதோ என்று எண்ணினாள். செடியெனினும் மனிதரின் உள்ளத்தையும் அறிந்து வாழ்கிறது போலும் என்று நம்பியிருந்தாள். "செடிதான் வளர்ந்து மலர்ந்து நிற்கிறது. உன் நினைவும் என் மனதிலே வளர்ந்து நிறைந்திருக்கிறது. உன் காதலும் என் மதிலே இந்த *யமபுகி* செடி போல வளர்ந்து வந்துள்ளது காலம் கண்டு *யமபுகி* மலர்ந்தது போல என் காதலும் உன் வரவை நோக்கி மலரக் காத்திருக்கிறது" என நினைத்து நினைத்து நெஞ்சு விம்முகிறாள்.

ஆர்கலி யேற்றோடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறென முகைக்கு நாடற்குத்
துயிறுறந் தனவால் தோழியென் கண்ணே[20]

இப்பாடலில் பிரிந்து சென்ற தலைவனைக் காத்திருக்கும் தலைவி ஒருத்தி தன் வீட்டுக் கொல்லையிலே பூத்த முல்லையைப் பார்த்துத் தோழியிடம் பேசுகிறாள். இங்கே காலம் மாறுபட்டுள்ளது. வேனிற் காலமன்று, கார் காலம். அவள் கணவன் வினைமேற் கொண்டு வெகு தூரம் சென்றுள்ளான். அவன் குறித்த காலத்தில் திரும்பி வருவேன் என்று கூறிப் போனான். முல்லை மலருமுன்பு உன்மென்தோள் சேர வருவேன் என்று மொழிந்துதான் போனான். முல்லையும் பூத்து விட்டது. அவன் குறிப்பிட்ட காலமும் வந்து விட்டது. முல்லைச் செடியை வீட்டிலே வளர்ப்பது முக்கியமான நடைமுறை. பெண்கள் மாலையாகத் தொடுத்துத் தலையிலே சூடுவதற்கும் கடவுளுக்கு மலர் மாலையிடுவதற்கும் முக்கியமாகத் தேவை எனினும் அந்த மலர்கள் காலம் கண்டு மலரும்.

பாடலில் 'எயிறென முகைக்கும்' என்ற தொடர் முல்லை மலர்கள் முற்றாக மலர்ந்து விடவில்லையென்பதை உணர்த்தி நிற்கிறது. மொட்டுக்கள் அரும்பியுள்ளன. வெண்மையான கூர்மையான பற்களைப் போல முல்லையின் மொட்டுக்கள் செடியெங்கும் பரவிக் கிடக்கின்றன. அவை விரைவில் மலர்ந்து விடும். அதை எண்ணியே இத்தலைவியும் தூங்காமல் துன்புறுகிறாள். முல்லையின் மொட்டு அவன் வரவேண்டிய காலத்தை உணர்த்துகிறது. இன்னமும் அவன் வராமையால் சில வேளை வரமாட்டானோ என்றும் அவள் நெஞ்சம் வருந்துகிறது. முல்லையைப் பார்க்கும் போதெல்லாம் அந்த எண்ணம் வருகிறது. அவன் திரும்பி வரும் போது முல்லையும் மலர்ந்து நிற்குமென்றுதான் அவள் நினைத்திருந்தாள். நீரூற்றி வளர்த்தாள். நீரூற்றும் போதெல்லாம் அவன் வரவையும் எண்ணிக் காதல் நினைவையும் நெஞ்சில் வளர்த்துவிட்டாள். காதல் நினைவின் பூரணத்தால் மனத்தாபம் பெருகிவிட்டது. இனிமேல் அவளால் எதையும் பொறுப்பதற்கில்லை.

*மன்யோசு* புலவர் சிக்கலின்றிச் சிறியதொரு செடியின் வர்ணனையிலே பொருளைத் தெளிவுபடுத்தியுள்ளார். *யமபுகி*யின் வளர்ச்சியும் மலர்ச்சியும் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். சங்கப் புலவரோ காலமும், இடமும் தெளிவுபடுத்த எண்ணியுள்ளார். மலர்களின் நிறத்திலும் வேறுபாடு காணப்படுகின்றது. *யமபுகி* மலர்கள் மஞ்சள் நிறமானவை. முல்லை மலர்கள் வெண்ணிறமானவை. முல்லையைப் பற்களுக்கு உதாரணமாகச் சங்கப்புலவர் காட்டுகிறார். ஆனால், *மன்யோசு* பாடல்களில் மலர்களை உறுப்புகளுக்கு உதாரணமாக்கிக் காட்டும் தன்மை குறைவு. ஒரு சில பாடல்களில் உடல் நிறத்திற்கு மலர்களை உதாரணங்களாகக் காட்டியுள்ளனர். இந்த உருவக வேறுபாடு இருமொழிப் பாடல்களிலும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

எனினும் இரு நாட்டுப் பெண்களின் துன்ப உணர்வும் மலர்ச் செடியின் தன்மையுடன் இணைத்துக் காட்டப் பெற்றிருப்பது ஒற்றுமையான பண்பாக அமைந்துள்ளது. காலநிலையிலும் *மன்யோசு* வேனிற் பிரிவின் துயரம் கூற, சங்கப் பாடல் கார் காலப் பிரிவின் துன்பம் கூறுகிறது. பிரிவின் தன்மையை இயற்கை நிலையிலே வைத்து விளக்க இருமொழிப் புலவர்களும் முற்பட்டுள்ளனர். *மன்யோசு* பெண், '*யமபுகி* போல விடவும் வேளையில்லை' என்று தன் உணர்வை *யமபுகி*ச் செடியுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றாள். சங்கப் பெண் நேரடியாகவே 'எயிறென முகைக்கு நாடற்கு துயில் துறந்தனவால்' எனத் தன் உணர்வை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறாள். பிரிவினால் துயில் கொள்ள முடியாத நிலை. அதைச் சங்கப் பெண் நட்புடைய தன் மனத் துன்பத்தை வெளியிட்டுள்ளான். சங்கப் பாடலை யாத்தவர் பெண் புலவர்

என்பது பெறப்படும். அதனால் பெண்ணொருத்தி இன்னொரு பெண்ணிடம் உண்மையான மனநிலையை வெளிப்படுத்துவது போலப் பாடியுள்ளார்.

அகத்தின் நுட்பமான எண்ணங்களை வெளிப்படுத்த இயற்கை நிலையினை இரு புலவர்களும் பொருத்தமாகப் புனைந்து காட்டியுள்ளனர். மனத்து நிலைக்கு மலர்களை உவமையாக்கியுள்ள கவியழகு சிறப்பானது. மொழி வேறுபடினும் மனத்து உணர்வினை வெளிப்படுத்தும் நயத்தக்க நாகரிகம் இரு இனத்தவரது பண்பாட்டு ஒற்றுமையினைப் புலப்படுத்துகிறது. நுட்பமான காதற் பொருளைப் பாடலாக்கி முன்னோர் அகவாழ்வின் தன்மையை, பின்னோர் அறியச் செய்த இப்புலவர்கள் இருவரும் பாராட்டுக்குரியவர்கள் என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியம் போன்ற அகப்பொருள் இலக்கணம் ஜப்பாணிய மொழியிலே இல்லை[21]. ஆனால். *மன்யோசு* பாடல்கள் அம்மரபு மக்கள் வாழ்க்கையில் இருந்ததைப் பதிவு செய்துள்ளது. பாடல்களிலே காதலர்களது உணர்வுகள், வேறுபட்ட பிரதேச வாழ்வு நெறிகள், நிலத்தன்மை நிலைகள், ஒழுக்கநிலை, மரம் பறவை என்பன பற்றிய செய்திகள், புணர்வு நிலைகள். பிரிவு நிலைகள், தெய்வம் பற்றி நம்பிக்கைகள், பெற்றோர் நிலை, நட்பாளர் தன்மை என்பன வெகுநுணுக்கமாகவே விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. இப்பண்புகளை முழுமையாக இக்கட்டுரையில் தரமுடியாமையால் சில முக்கிய நிலைகளை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன்.

*மன்யோசு* பாடல்களில் காணப்படும் அகப்பொருள் ஒற்றுமைநிலை வகைப்படுத்தி இங்கே விளக்கப்பட்டுள்ளது.

1. தமிழிலக்கியப் பாடல்களிலே வருகின்ற கூற்றுநிலையாகவே *மன்யோசு*விலும் உணர்வுகள் விளக்கப்பட்டுள்ளன. தமிழ் அகப்பொருள் மரபின் முக்கியப் பாத்திரங்களான தோழி, தலைவன், தலைவி, கண்டோர், நற்றாய் என்பவற்றோடு ஒற்றுநிலையாக உள்ளது.
2. பாத்திரங்களின் உணர்வுகளும் கூற்றுகளும் சங்கப் பாடல்களைப் போன்று இயற்கைப் பகைப்புலத்தோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளன.
3. காதலர் உணர்வுகளைப் புலப்படுத்தும் போது இடையிலே ஜப்பானிய மக்களது பிரதேச வாழ்வு நெறியும் பண்பாடுகளும் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.
4. காதலன் பிரிந்து செல்கின்ற வழி, வழியின் இடர்கள், திரும்பிவரும் காலநிலை, காதலியின் காத்திருப்பு நிலை, அவள் பிரிவுத் துயர் நிலை, தாய்மார்களின் கண்டிப்பு, ஊரல் என்பன விளக்கப்படும் தன்மை சங்கப் பாடல்களோடு பெரிதும் ஒற்றுமையுடையது.
5. வேறுபட்ட பிரதேசங்களிலே வாழுகின்ற ஆண், பெண் தொடர்பு நிலையும் விளைவுகளும் சமூகநிலையிலே ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வு நடத்துவதற்கான அடிப்படையான நடைமுறைகளின் தன்மையும் விளக்கல்.
6. திருமணமான ஒருத்தியை ஆண் விரும்பும் நிலை.
7. பொருள், தூது, பகை என்ற நிலையிலே பிரிந்த கணவர்கள் வரும்வரை பிரிவைப் பெண்கள் ஆற்றியிருத்தல்.
8. பிரிவு நிலை இயற்கைக் காலநிலையோடு இணைந்து விளக்கல்
9. ஆணும், பெண்ணும் சூளுரை பரிமாறிக் கொள்ளல். மலை, ஆறு, கடல், மரம் என்பனவற்றை முன்னிறுத்திச் சூளுரை செய்தல்.
10. தெய்வ நம்பிக்கையும் தெய்வமடை போடும் நிலையும். தமது காதல் நிறைவேறி இருவரும் ஒன்றுசேர ஏதாவது இடையூறு நேரின் தெய்வமடை போடுவதாக வாக்குறுதி செய்தல். மரம், மலை, ஆறு, கடல் என்ற இயற்கைச் சக்திகளை வழிபட்ட சங்க காலத் தமிழருக்கும் ஜப்பானிய மக்களுக்கும் உணர்வு நிலையிலே இருந்த ஒற்றுமை இதன் மூலம் விளக்கமாகின்றது.
11. நிலங்களின் தன்மைக்கேற்ற மக்களின் வாழ்க்கைமுறை, நடைமுறைகள் வேறுபட்டதை விளக்கல். பயிர்செய்கை, மீன்பிடித்தல், வேட்டை, அரசகாரியம் என அவரவர் வாழுகின்ற நிலத்தன்மைகேற்ற தொழில் முறைகளுடன் இயங்கிக் கொண்டிருந்த மக்களின் உணவு, உடை, உறையுள், ஏனைய பழக்கவழக்கங்கள் என்பனவற்றிலும் வேறுபாடிருந்ததை விரிவாக விளக்கல்.

மேல் வகைப்படுத்திக் காட்டியுள்ள அகப்பொருள் மரபுகளைத் தொல்காப்பியர் வகுத்துக் கூறிய அகப்பொருள் இலக்கண மரபுடன் பொருத்திப் பார்க்கும்போது *மன்யோசு*ப் பாடல் மரபும் பெரிதும் ஒற்றுமைப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது. முதல், உரி, கருப்பொருள்கள் பற்றிய தொல்காப்பியரது இலக்கணம் முற்றாகவே பொருந்தும் நிலையாயுள்ளது.

சங்கப் பாடல்கள், *மன்யோசு*ப் பாடல்கள் இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது சில முக்கியக்

கருத்துகள் பெறமுடிகிறது. இரு இனத்தவரது வாழ்வியல் நடைமுறைகளும் மிகவும் நெருங்கிய தொடர்புடையவனவாக இருக்கின்றன. இவ்வொற்றுமைக்கு முக்கியக் காரணம் தமிழரும் ஜப்பானியரும் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தியமையே. அதனாலேயே மனித உணர்வுகளையும் இயற்கை நிலையுடன் இணைத்துச் செய்யுள் செய்கின்ற மரபினைப் பொதுமையான பண்பாகக் கொண்டுள்ளனர். அதிலும் காதல் உணர்வுகளை இயற்கை நிலையுடன் இணைத்துக் கூறுவது சிறப்பான தனித்துவமான மரபாக உள்ளது. அந்த ஒற்றமை நிலையினைத் தொல்காப்பியரது அகப்பொருள் மரபிலே வைத்துப் பார்க்கும் போது அது மேலும் தெளிவாகின்றது. சங்கப் பாடல்களும் *மன்யோசு* பாடல்களும் இன்றும் தத்தமது பண்பாடுகளை எடுத்து விளக்குவனவாக நிலைத்து நிற்பதற்கு அவற்றின் தனித்துவமே காரணமாகும்.

## அடிக்குறிப்புகள்:

1. Susumu Ohno, (1980) " *Sound Correspondences Between Tamil and Japanese*", P. 1
2. மனோன்மணி சண்முகதாஸ், (1997 *"தமிழர் – ஜப்பானியர் அகப் பொருள் மரபு ஓர் ஒப்பீட்டாய்வு"*, ப. 28
3. மனோன்மணி சண்முகதாஸ், (2000) *"ஜப்பானியக் காதல் பாடல்கள்"*, ப.1
4. Susumu Ohno, Arunasalam Sanmugadas & Manonmani Sanmugadas,(1985) " *Worldview and Rituals among Japanese and Tamils*"
5. மனோன்மணி சண்முகதாஸ், *"தமிழர் – ஜப்பானியர் அகப்பொருள் மரபு : ஓர் ஒப்பீட்டாய்வு"*, (1997), ப. 29
6. மனோன்மணி சண்முகதாஸ், (2000) *"ஜப்பானியர் காதல் பாடல்கள்"*, ப.2.
7. சுசுமு ஒனோ, (1952) *"மன்யோசு"* தொகுப்பு முன்னுரை
8. மனோன்மணி சண்முகதாஸ், (2000) *"ஜப்பானியக் காதல் பாடல்கள்"*, ப.3
9. மனோன்மணி சண்முகதாஸ், (1997) *"தமிழர் – ஜப்பானியர் அகப்பொருள் மரபு: ஓர் ஒப்பீட்டாய்வு"*, ப.31.
10. மனோன்மணி சண்முகதாஸ், (1992) *'மன்யோசு காதற் காட்சிகள்'*, ப. XVI
11. *மன்யோசு* பாடல், (1982)
12. ஐங்குறுநூறு, 341
13. *மன்யோசு* பாடல், 1905
14. குறுந்தொகை, 24
15. *மன்யோசு* பாடல், 1911
16. நற்றிணை, 75
17. *மன்யோசு* பாடல், 1917
18. ஐங்குறுநூறு, 423
19. *மன்யோசு* பாடல், 1907
20. குறுந்தொகை, 186
21. மனோன்மணி சண்முகதாஸ், (1987) *"தமிழர் – ஜப்பானியர் அகப்பொருள் மரபு : ஓர் ஒப்பீட்டாய்வு"*, ப.33

## துணை நூல்கள்:


ஐங்குறுநூறு

குறுந்தொகை

நற்றிணை

மனோன்மணி சண்முகதாஸ், (1992) *'மன்யோசு காதற் காட்சிகள்'*, கொழும்பு: கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

மனோன்மணி சண்முகதாஸ், (1997) "தமிழர் – ஜப்பானியர் அகப்பொருள் மரபு: ஓர் ஒப்பீட்டாய்வு" *ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு மலர்*, கோலாலம்பூர்: மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

மனோண்மணி சண்முகதாஸ், 1992 *'மன்யோசு: ஜப்பானியக் காதற் பாடல்கள்'*, இலங்கை: வராவொல்லை வெளியீடு.

மனோன்மணி சண்முகதாஸ், 2000 *"ஜப்பானியற் காதல் பாடல்கள் "*, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சுகுமு ஒனோ, (1952) *'மன்யோசு'*, தோக்யோ: இவனமி சொதெ..

Aston, W. G., A (1973) **History of Japanese Literature,** Tokyo: Charles E. Tuttle Company.

Donald Keene, (1964) **Landscapes and Portraits: Appreciations of Japenese Culture,** Tokyo: Kodansha International Ltd.

Geoffrey Bowns and Anthony Thwaite, (1971) **The Penguin Book of Japanese Verse,** Victoria: Penguine Books Ltd.

Kumaran, S., (2003) **"Cultural Relationship Between Tamil and Japanese"**, *Tamil Studies: Selected papers,* Kuala Lumpur: International Association of Tamil Research Malaysia.

Kumaran, S., (2003) **"The Relationship between the Japanese Kojiki and the Tamil Classical Literature"**, *Tamil Studies: Selected Papers,* Kuala Lumpur: International Association of Tamil Research Malaysia.

Robert H. Brower and Eart Miner, (1975) **Japenese Court Poetry,** California: Stanford University Press.

Susumu Ohno, (1980) **"Sound Correspondences Between Tamil and Japanese",** Tokyo: Gakushuin Educational Foundation.

Susumu Ohno Arunasalam Sanmugadas, Manonmani Sanmugadas, (1985) **"Worldview and Rituals among Japanese and TamilS',** Tokyo: Gakushuin University.